# BSNL ஊழியர் சங்கம்.
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்: 26** **தேதி:24.07.2010.**

## UNITED FORUM கோரிக்கைகள்

கீழ்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 2010, ஆகஸ்ட் 5ல் ஆர்ப்பாட்டமும் ஆகஸ்ட்,12ல் தர்ணாவும் நடத்திட United forum அறைகூவல் விடுத்துள்ளது.

## <u>கோரிக்கைகள்</u>

> 01.10.2000 முதல் செய்யப்பட்ட ஊதிய மாற்றத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் மீதான அனாமலிக் கமிட்டி அறிக்கையினை உடனடியாக அமுல் படுத்த வேண்டும்.

> ஊழியர்களின் பதவி உயர்வு திட்டத்தில் ஊழியர் தரப்பில் கோரியபடி விளக்கங்களை கொடுக்க வேண்டும். மாற்றங்களை அமுல்படுத்த வேண்டும்.

> முதலில் வாங்கிய மொத்த ஊதியத்தை விட குறைவாக ஊதியம் பெற்று, நிலுவைத் தொகை கணக்கீட்டில் திரும்ப செலுத்தக்கூடிய நிலையில் இருக்கின்ற 01.01.2007க்கு பின் பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு பொருத்தமான ஊதிய நிர்ணய சூத்திரத்தை உருவாக்கி ஊதிய பாதுகாப்பு வழங்கவேண்டும்.

> மற்ற பல மத்திய அரசுத் துறைகளிலும், பொதுத் துறைகளிலும் செய்துள்ளதைப் போல மீதமுள்ள கேசுவல் ஊழியர்களை நிரந்தரப் படுத்து. தகுதியான கேசுவல் ஊழியர்களை தற்காலிக அந்தஸ்து வழங்க வேண்டும். கேசுவல் ஊழியர்களின் ஊதியத்தை IDA ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்ய வேண்டும்.

> ஊழியர்களுக்கான பதவி உயர்வுக் கொள்கையில் SC/ST ஊழியர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.

> SC/ST ஊழியர்களின் தேங்கியுள்ள காலிப் பணியிடங்களை (backlog vacancies) அனைத்து கேடர்களிலும் நிரப்ப வேண்டும்.

> தற்போது ஊழியர்கள் சந்திக்கக் கூடிய சிரமங்களை நீக்கக் கூடிய வகையில் BSNL MRS கொள்கையில் மாற்றங்களை செய்ய வேண்டும். BSNLன் 16.04.2010 தேதியிட்ட கடித எண்.BSNL/Admn.I/15-10/7 மூலமாக அறிவிக்கப்பட்டுள்ள BSNL MRS திட்டத்தின் அடிப்படையில் இரண்டு குழந்தைகளுக்கு மட்டும் என்று வரையறுக்கப்பட்ட மோசமான முடிவினை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

> தற்போது முன்வைக்கப்பட்ட ஊழியர்களுக்கான புதிய NORMSஐ திரும்பப் பெற வேண்டும். அது தொடர்பாக முடிவு செய்ய ஊழியர் தரப்போடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.

நமது நியாயமான கோரிக்கைகளை வென்றடைய இயக்கங்களை வெற்றிபெறச் செய்வோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,
**S.செல்லப்பா**
**மாநில செயலர்.**